தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 15, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 ஆகஸ்ட் 31, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு."

குற்றம் இல்லாதவராய் குடிமக்கள் உயர்வதற்கான செயல்களைச் செய்து வாழ்கின்றவரைச் சுற்றமாக விரும்பி மக்கள் சூழ்ந்துகொள்வர்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. ஒழுங்குப் பிரச்சினை

வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கத் தீர்மானம் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. அடுத்தது, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கத்தர் நாட்டுக்கு....(குறுக்கீடு)*

***திரு. துரைமுருகன்:** Sir, I am on a point of order. ஒரு முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையைத் தங்களுடைய மேலான கவனத்திற்கும் தங்களுடைய தீர்ப்புக்கும் கொண்டு வருகிறேன். இந்த அவையில் முதல் ஒரு மணி நேரம் என்பது கேள்வி நேரத்திற்கு ஒதுக்கப்படுகின்ற ஒன்றாகும். அந்தக் கேள்வி நேரத்தை நாம் இரத்து செய்கிறோம் என்று சொன்னால்

[திரு. துரைமுருகன்] [2001 ஆகஸ்ட் 31

அதற்குச் சில நடைமுறைகள் உண்டு. "The first hour of every sitting shall, unless the House unanimously resolves otherwise, be available for asking and answering the questions" என்று நம் விதிகளிலே உள்ளது. எனவே, ஒருமனதாக இந்த அவை தீர்மானித்தாலன்றி கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியாது. அப்படி இரத்து செய்ய வேண்டுமானால் அவை முன்னவர் அவர்கள் இந்த அவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அந்தத் தீர்மானம் தங்களால் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு ஒருமனதாக அது நிறைவேற்றப்பட்டால்தான் கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியும். ஆனால், நேற்றைக்கிருந்த நம்முடைய சோகச் சுமையில், நீங்கள் B.A.C.-யில் எடுக்கப்பட்ட முடிவை நேராக வந்து தெரிவித்து நாளைக்குக் கேள்வி நேரம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். அது இந்த அவையினுடைய சட்டத்திற்கும் மரபுக்கும் மாறுபட்ட ஒன்றாகும் என்பது என்னுடைய ஒழுங்குப் பிரச்சினையினுடைய மையக் கருத்தாகும். இதற்குத் தங்களுடைய தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அலுவல் ஆய்வுக் குழுவிலே இந்த முடிவு எடுக்கப்பட்டது. நேற்றைய சூழ்நிலையில் நாம் அதைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு இல்லை. அவை முன்னவரும் அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடிய நிலைமை இல்லை. கேள்வி நேரம் இன்றைக்கு இல்லை என்பது நேற்று ஏற்கெனவே எடுக்கப்பட்ட முடிவு.

திரு. துரைமுருகன்: It is against the rules and customs. இன்றைக்குக் கேள்வி நேரத்தை நீங்கள் இரத்து செய்ய வேண்டுமானால் அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தாலொழிய கேள்வி நேரத்தை இரத்து செய்ய முடியாது. மாண்புமிகு அவை முன்னவரையே கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதில் ஒன்றும் இல்லை. ஏற்கெனவே மரபுகள் இருக்கின்றன.

திரு. துரைமுருகன்: இல்லை. ஓர் உறுப்பினர் மறுத்தால்கூடக் கொண்டுவர முடியாது. You ask the Leader of the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே மரபுகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2001 ஆகஸ்ட் 31]

திரு. துரைமுருகன்: இப்போதும் நேற்றைய நிலையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஏற்கெனவே...

திரு. துரைமுருகன்: இல்லை, பிரச்சினை இருக்கிறது. ஏனென்றால் இது எழுதப்பட்ட சட்டம். நாம் கொஞ்சம் கொஞ்சமாக மரபுகளையும் சட்டத்தையும் விட்டு விலகிக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, திரு. துரைமுருகன், ஏற்கெனவே முன்னுதாரணங்கள் இதற்கு இருக்கின்றன என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. துரைமுருகன்: இல்லை, இல்லை. அப்படிச் சொல்லி இருந்தால், உங்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்பது பொருள். இப்போதும் குடி முழுகிவிடவில்லை. சட்டத்தை மதித்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும். அதை அவை ஏற்றுக்கொண்ட பிறகுதான் தாங்கள் கேள்வி நேரத்தை இரத்து செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி ஒன்றும் இல்லை. உங்களுடைய விருப்பம் அதுவானால் தீர்மானத்தைக் கொண்டுவரச் சொல்லலாம்.

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே, அப்படியென்றால் நேற்றுதான் கொண்டு வந்திருக்க வேண்டும்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை.

திரு. துரைமுருகன்: அப்படியென்றால் கேள்வி நேரத்தைக் கொண்டு வாருங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அலுவல் ஆய்வுக் குழுவில் நேற்று எடுக்கப்பட்ட முடிவு.

1. ஒழுங்குப் பிரச்சினை-தொடர்ச்சி

வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைக்கத் தீர்மானம் கொண்டு வருதல்-தொடர்ச்சி

திரு. ம. அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, ஏன் மரபு இல்லை? நேற்று நீங்கள் சபைக்கு அறிவிப்புச் செய்தீர்கள். அந்தப் பிரச்சினை, அதாவது இன்றைக்குக் கேள்வி நேரம் இல்லை என்பது சபைமுன் வைக்கப்பட்டது. ஆனால் தீர்மான வடிவிலே வைக்கப்பட்டதா இல்லையா என்பது பிரச்சினை அல்ல. ஏதாவது சில முக்கியமான காலகட்டத்திலே சபையின் முன் வைக்கப்படுகிற பிரச்சினையைச் சபை ஏற்றுக்கொள்கிறது என்பதுதான் மரபு. Presumption. That is the legal presumption. The presumption is that it has been duly accepted by the House and therefore, the Hon. Minister need not present a new resolution. இன்றைக்கு நீங்கள் அதை ஏற்படுத்தினால் நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அது ஏற்கெனவே நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படியோ தீர்மானம் நிறைவேறிவிட்டது.

திரு. ம. அப்துல் லத்தீப்: நிறைவேறி விட்டது சரிதான். ஆனால் சரியான மரபுக்கு மரபு ஒன்று கொண்டு வருவது சரியல்ல.

திரு. துரைமுருகன்: நேற்று அந்தச் சூழ்நிலையில் point of order கிளப்பி இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள்.

திரு. ம. அப்துல் லத்தீப்: அந்தச் சூழ்நிலையில் ஒரு தீர்மானத்தை முறையாக மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் சபைமுன் வைத்தார்கள். அதை, அந்த நேரத்தில் தீர்மானம் தேவையில்லை என்பதற்காக சபை ஏற்றுக்கொண்டது. சபை ஏற்றுக்கொண்ட பிறகு House is supreme...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லத்தீப் அவர்கள் சொல்லக் கூடிய அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது துரைமுருகன் சொன்ன கருத்தையும் ஏற்றுக்கொண்டேன். எல்லாம் முடிந்து விட்டது. பிரச்சினை தீர்ந்தது.